திரு, கே. உச்சி ; தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு கடை என்பதை மாற்றி, அதற்கு அருகாமையில் இரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள ஊர்களுக்கு, மலைப்பகுதியாக இருப்பதால் இந்தத் திட்டத்தை அங்குள்ள படித்த வேலையில்லாத வாலிபர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது ரெவின்யூ கிராம அடிப்படை என்ற வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்திலேயே 'வயபிலிட்டி' என்ற அதை அடைவதற்கே சில நாட்களாகும் என்ற அனுபவம் ஏற்பட்டிருக்கின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய யோசனை மீண்டும் ஆலோசிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 'கடை திறந்தேன், கொள்வாரில்லை, கட்டிக் கொண்டேன்' என்று இராமலிங்க அடிகள் சொன்னமாதிரி இல்லாமல், தொடர்ந்து இந்தக் கடைகள் நடக்கின்ற முறையில் நடவடிக்கை எடுப்பதோடு, அந்தக் கடைகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு 100 ரூபாய்தான் ஊதியம் கொடுக்கப்படுகிறது, இதை வைத்துக்கொண்டு அவர்கள் வாழ முடியுமா, வசிக்க முடியுமா என்று பார்த்து, குறைந்த பட்சம் 250 ரூபாயாவது அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா, அதை ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான ஆலோசனைகள் அனுதாபத்தோடு நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

காய்கறி விற்பனை நிலையம்

*வினா எண் 64—திரு. போ.கோபாலன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

உதகமண்டலம் மார்க்கெட்டிங் கூட்டுறவு சங்கத்தின் மூலம் காய்கறி விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

நீலகிரி மாவட்டத்தில் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகிய இரண்டும் மலையில் விளையும் காய்கறிகளை விற்பனை செய்து வருகின்றன. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் உதகை

1979 பிப்ரவரி 17]

சந்தையில் ஏற்கெனவே ஒரு காய்கறி விற்பனை நிலையம் நடத்தி வருகிறது. புதிதாக காய்கறி விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை. மேலும் நீலகிரி காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் 6·01 இலட்சம் செலவில் அலுவலகத்துடன் இணைந்த ஏல விற்பனை நிலையம் ஒன்றை உதக மண்டலத்தில் தற்பொழுது கட்டியிருக்கிறது.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, ஏற்கனவே அந்தச் சங்கத்தில் நடந்து கொண்டிருக்கும் கட்டிடம் மிகவும் இடைஞ்சலான பகுதியில் இருப்பதாலும், அதைப் புதிய இடத்திற்கு மாற்றினால் மக்களுக்கு வாங்குவதற்கும், தாங்கள் கொண்டு வரும் காய்கறிகளை விற்பதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே புதிய திட்டத்தை மறுபடியும் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்மைக்காலத்தில் நீலகிரி மலையிலே ஏற்பட்டுள்ள இயற்கையின் உற்பாதத்தின் காரணமாகச் சேதத்திற்குள்ளாக்கப்பட்ட ஒரு நிறுவனம் கூட்டுறவு நிறுவனம். அதனை நானே நேரில் சென்று பார்க்கின்ற வாய்ப்பு ஏற்பட்டது. எனவே, நிச்சயமாக இந்த அரசு அதனைத் திருத்தி சீரமைக்க என்னென்ன உரிய நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுக்க வேண்டுமோ அதனை விரைவிலே நிச்சயமாக எடுக்கும்.

(முற்பகல் 9.20)

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, உதக மண்டலத்திலுள்ள கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலம் காய்கறிக்கடைகள் மேலும் அமைக்கப்படாது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். கொடைக்கானல் பகுதியிலாவது அம்மாதிரி கூட்டுறவுக் காய்கறி கடைகள் அமைக்கும் திட்டம் ஏதேனும் உண்டா? காய்கறிகளுக்குத் தற்பொழுது பெரும் பகுதிப் பெயர்கள் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. ஆகவே, அவைகளை தமிழில் மாற்றியமைக்க அரசு ஏதேனும் உத்தேசித்துக் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, கொடைக்கானல் திருநகரத்தின் கூட்டுறவு விற்பனை நிலையத்தின் வாயிலாக காய்கறிகள் விற்க ஏற்பாடு செய்யப்படுமா என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டிருக்கிறார்கள். தற்பொழுது நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் வாயிலாக மட்டும் அல்ல, நீலகிரி காய்கறி உற்பத்தியாளர்கள் விற்பனைச் சங்கத்தின் வாயிலாக மட்டுமல்ல, மேலும்

[1979 பிப்ரவரி 17

4 இடங்களில் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 1. தூத்துக்குடி, 2. திருச்சி, 3. கொடைக்கானல், 4. திண்டுக்கல் ஆகிய கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுடைய விற்பனை வாயிலாகவும் காய்கறி விற்பனை தற்பொழுதே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கொடைக்கானல் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் வாயிலாக உருளைக் கிழங்கு, ரூ. 4,78,000 மதிப்புள்ள வகையிலே இன்றையதினம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதனைப்போல், திண்டுக்கல் விற்பனை நிலையத்திலே வெங்காயம் ரூ.35,51,000-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. திருச்சி கூட்டுறவு விற்பனை நிலையத்திலே வெங்காயம் ஏறத்தாழ ரூ. 1,00,000-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தூத்துக்குடி கூட்டுறவு விற்பனை நிலையத்தில் வெங்காயம் ஏறத்தாழ ரூ.6,000 அளவுக்கு விற்பனைக்கு அந்த முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, கொடைக்கானல் கூட்டுறவு விற்பனை நிலையத்திலே தற்பொழுது ரூ. 4,78,000 அளவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தண்டையார்பேட்டை பகுதியில் நில ஒப்படை

*வினா எண் 65—திரு. சு. பாலன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை 27-வது வட்டம், தண்டையார்பேட்டையில் காத்பாடா அட்டிங் கிரவுண்ட் ஆர். எஸ். 1802/3, சிதம்பரம் நகரில் சர்க்காருக்குச் சொந்தமான ஆர். எஸ். நெம்பர் 1802 நிலத்தில் எத்தனை அரிசன குடும்பங்கள் வாழ்கின்றனர்?

(ஆ) அவர்கள் எவ்வளவு காலம் அங்கு வாழ்கின்றார்கள்?

(இ) அவர்கள் வாழும் அந்த இடத்திற்கு ஏதாகிலும் வரி அல்லது வாடகை வசூல் செய்யப்படுகிறதா?

(ஈ) இவர்கள் வாழும் இந்த இடத்தைப் பட்டா செய்து செய்து கொடுக்க வேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா?

(உ) ஆம் எனில் அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?